

முத்தமிழறிஞர் கலைஞர் 102–வது பிறந்தநாளையொட்டி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூரில் 500 பேருக்கு அறுசுவை உணவு, நீர், மோர் ஆகியவை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர்கள் ப.குணாளன், என்.சந்திரன் எம்.சி., எம்.எஸ்.கே. இப்ராஹிம், முரளி கிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ–மாணவிகளுக்கு இக்கல்வியாண்டுக்கான விலையில்லா புத்தகப் பை, புத்தகங்கள், நோட்டுகள் உள்ளிட்ட கல்விச் சாதனப் பொருட்களை வழங்கும் நிகழ்வைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண்.61, எழும்பூர், வரதராஜபுரத்திலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளி, வார்டு எண்.99, புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் கோவில் தெருவில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஷெனாய் நகர் சுப்பராயன் தெருவில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் வார்டு எண்.61, எழும்பூரிலுள்ள அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடந்த விலையில்லா கல்விச் சாதனைங்கள் வழங்கும் நிகழ்ச்சிகளில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, புத்தகப் பை, புத்தகங்கள், நோட்டுகள் உள்ளிட்டவற்றை மாணவ–மாணவிகளுக்கு வழங்கினார்

### வேளச்சேரி கிழக்கு – மேற்குப் பகுதி

# வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## துரை கபிலன் – அரிமா சு.சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 4

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இது குறித்து பகுதிச் செயலாளர்கள் துரை கபிலன், அரிமா சு.சேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

வேளச்சேரி கிழக்கு மற்றும் மேற்கு பகுதி கழக வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு மற்றும் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று 04.06.2025 புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு பகுதி அவைத் தலைவர்கள் அருணா வேலாயுதம் மற்றும் சி. பழனி அவர்கள் தலைமையில் பகுதி கழக செயலாளர்கள் துரை கபிலன் சு.சேகர் முன்னிலையில் வேளச்சேரி மேற்கு பகுதி கழக அலுவலகமான பொ. தனசேகரன் மாளிகையில் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளதால்

இதில் இரண்டு பகுதிகளில் அடங்கிய மாநில, மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் மற்றும் மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

### திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்

# புஜ்ஜி டி. ராமகிருஷ்ணன் மறைவு!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார் !

திருவள்ளூர் ஜீன் 04;



திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.இராமகிருஷ்ணன் உடல் நலக்குறைவால் தனியார் மருத்துவமனையில் இயற்கை எய்தினார் அவரது உடல் திருவள்ளூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளிவூர் ஊராட்சி இராமராஜ் கண்டிகை உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டது இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அன்னாரின் திருவுருவ உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி மற்றும் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றார்

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஆ.கிருஷ்ணசாமி, வி.ஜி. இராஜேந்திரன், ஐ.பரந்தாமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.ஜெ.ரமேஷ், திருத்தணி எம்.பூபதி, ஜெ.மூர்த்தி, ஆவடி மாநகர மேயர் ஜி. உதயகுமார், , அரசு வழக்கறிஞர் எஸ். மூர்த்தி மா.இராஜ், கே.திராவிடபக்தன், மு.பகலவன், மாநில நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, சி.எச்.சேகர், ஆர்.டி.இ.ஆதிசேசன். வி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ். ஜெயபாலன், பா.நரேஷ்குமார், டாகடர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், மு.கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், ப.சிட்டிபாபு, , மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சண்.பிரகாஷ், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசத், பேபிசேகர், டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், என்.இ.கே. மூர்த்தி, தி.வை.இரவி, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, கூளூர் எம்.ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், பொன்.பாண்டியன், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், எஸ். மகாலிங்கம், ஜி.ரவீந்திரா, வே.ஆனந்தகுமார், டி.கே. சந்திரசேகர், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய நிர்வாகிகள் பர்க்கத்துல்லாகன், டி.தென்னவன், மனோகரன், மதுரை வீரன், விமலா குமார், பிராங்கிளின், வேலு, முகமது ரஃபி, டி. என்.எஸ்.வெங்கடேசன், க.ஸ்ரீதர், கோடுவெளி குமார், இளைஞரணி கே.சுரேஷ்குமார், கே.வி. லோகேஷ், சங்கீதா சீனிவாசன், ஏ.ஜெ.பவுல், வி.எஸ். நேதாஜி, பி.கே.நாகராஜ், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, டி.மோதிலால், டி.கே.பாபு, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், பி.எல்.ஆர். யோகா, ஜெ.சுதாகர், டி.கே. அசோக்குமார், டி. குமரேசன், கு.பிரபாகரன், கருணாகரன் , கபிலன், துளசி பாஸ்கர், தமிழ்வாணன், பலராமன் , சந்தோஷ் ஜஸ்டின், டி.எம்.எஸ்.வேலு, வி.தியாகராஜன், ஓ.ஆர்.நாகூர் கனி, ஆர் பிரவீன் குமார், வெங்கல் பாஸ்கர், காஞ்சிபாடி சரவணன், கே.ஜி.ஆர். ராஜேஷ் , வழக்கறிஞர் நாகராஜ் , வழக்கறிஞர் வினோத், அரசு வழக்கறிஞர் புரட்சி தாசன் தமிழ்ச் செல்வி, விமல் ஆனந்த் , எம்.மோகன், ஏ.ஜி.ரவி, ஜேக்கப் , ஜெயபுகழேந்தி தரணி, சரத்பாபு, சஞ்சய், சதீஷ், கமல், சூர்யா, ராஜ்மோகன், நேதாஜி , அஜித் , துர்கா தேவி, ரூபன், பாலாஜி, மணிகண்டன் , சுந்தரம் , சந்தானம், புருஷோத் பிரேம், பாஸ்கர், ரவி , முருகேசன் , வசந்தி பாலாஜி, வெங்கடேசன் , மதிவாணன், அப்புன்ராஜ் , நாகராஜ் , பிரபு , சிற்றரசு, ராமானுஜம், பக்தவச்சலம், மோசஸ் , சௌந்தரராஜன், ஹரி கிருஷ்ணன், டானி பெருமாள், மூர்த்தி, கன்னியப்பன் , ஏழுமலை, ஆனந்த், நாகராஜ், ஜெயம்மாள், வடமதுரை அப்புன், அயத்தூர் ராஜேஷ் ,மஞ்சுளா, ராஷிக், காரணி சத்யா, கிழச்சேரி தேவா, ஏ.கே.சரத்குமார் , இரா. தனசேகர், ஒதிக்காடு அலெக்ஸ், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.



மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு வார்டு–149, ஆழ்வார்திருநகர், காந்தி சாலையில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., எஸ்.அருணாச்சலம், வ.செல்வகுமார் எம்.சி., வி. ராஜேஷ், பி.எம்.செல்வராஜ், வே. மதியழகன், இரா. பால்பாண்டியன், கே.ராஜி எம்.சி., த.ரமேஷ், எஸ்.ரமேஷ்ராஜ், சி.சுந்தர், அ.மோசஸ், ஜெ.பாஸ்கரன், தி.சார்லஸ், ஆ. செல்வம், ச.சங்கர்கணேஷ் எம்.சி., செல்வி ரமேஷ் எம்.சி., ஆர்.சிவலிங்கம், எஸ்.ரவி, கே. நாராயணன், வி.விஜயன், ஆர்.சேகர், எஸ்.திருநாவுக்கரசு, ஜி.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு 89வது வார்டில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்எல்ஏ, 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே மூர்த்தி எம் சி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. எம்.இ.சேகர் எம்.சி. ஆகியோர் கழகக் கொடியேற்றி, உறுதிமொழி ஏற்ற பின் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.



அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கூடலூர், எல்.எண்டத்தூர், கிளியாநகர், வேடந்தாங்கல் ஆகிய ஊராட்சிகளில் தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அன்னதானம் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா பென்சில் உள்ளிட்டவைகளை அச்சரப்பாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. தம்பு வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் டி. ஆர்.நாராயணன், வேணு, இளங்கோ, சிவபெருமான், தேவு, தசரதன், சித்ரா, வேதாச்சலம், சரத்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 21 ஊராட்சிகளிலும் கிளைக் கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

### பா.பாலஉமாபதி ஏற்பாடு !

# சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் !

## ஆர்.டி.மதன்குமார் – வாசு.கருணாநிதி – பி.எஸ்.சைலஸ் பங்கேற்பு !

சென்னை, ஜூன்04

சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ, ஆலோசனைபடி திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், கிழக்கு பகுதி செயலாளரும் மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு, ஆகியோர் அறிவுறுத்துதலின்படி வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார், தலைமை கழக சொற்பொழிவாளர் வாசு. கருணாநிதி, மாவட்ட கழகப் பிரதிநிதி கழகப் பேச்சாளர் பி.எஸ்.சைலஸ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் கு.தமிழ்மணி, ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்டத் துணை அமைப்பாளர் எச். ஜெகன், திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞரணி பகுதி துணை அமைப்பாளர்கள் எம்.கார்த்திக், ஆர். எம்.மணிகண்டன், மேற்கு பகுதி இளைஞரணிச் துணை அமைப்பாளர் ஆர். சி.எம்.சதீஷ், 4வது வட்ட பொருளாளர் பி.எம்.ஹரி, கழகப் பேச்சாளர் போட்டோசெந்தில், முன்னாள் மகளிர் தொண்டர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ராதா, தங்கவேலு, பகுதி இலக்கிய அணி துணை அமைப்பாளர் டி.பால்ராஜ், மற்றும் கழக செயல்வீரர்கள் டி.இ.பரணிக்குமார், தாமோதரன், எம்.ராம், ஏ.என்.சேகர், ஜெயவேலு, வழக்கறிஞர் சி.தினேஷ், ஜி.கணேஷ், வி.விமல், சந்துரு, எம்.புருஷோத்தமன், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# ரூ.12.68 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு வழங்கினர்!

நெல்லை, ஜூன் 4

நெல்லை மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு நீண்ட நாள் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கி சிறப்பித்து வருகிறது.அதன்படி

ரூ.12.68 கோடி மதிப்பில் 6,754 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினார்கள்.

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் நேற்று (30.05.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார்,, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர்இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் ஆகியோர் முன்னிலையில் ரூ.12.68 கோடி மதிப்பில் 6,754 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

அதன்படி வருவாய்த் துறை சார்பில் 258 பயனாளிகளுக்கு இ-பட்டாக்களும்,ரூ.2.77 கோடி மதிப்பில் 187 பயனாளிகளுக்கு வரன்முறை பட்டாக்களும்,பட்டா மாற்றம் 868 பயனாளிகளுக்கும், ரூ.2.52 கோடி மதிப்பில் 172 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களும், 4823 பயனாளிகளுக்கு நகர நிலவரி திட்டத்தின் கீழ் பட்டாக்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.35,500 மதிப்பில் 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளும், ரூ.56 ஆயிரம் மதிப்பில் 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், 50 பயனாளிகளுக்கு சீர் மரபினர் அடையாள அட்டைகளும், மாவட்ட தொழில் மையம் சார்பில் ரூ.29 இலட்சம் மதிப்பில் 24 பயனாளிகளுக்கு வேலையில்லா இளைஞர்களுக்கு தொழில் துவக்கும் திட்டத்தின் கீழ் கடனுதவிகளும், ரூ.2 இலட்சம் மதிப்பில் 13 பயனாளிகளுக்கு கலைஞர் கைவினைத் திட்ட உதவிகளும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ரூ.6.26 கோடி மதிப்பில் 202 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.8.40 இலட்சம் மதிப்பில் 8 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனம் சார்பில் ரூ.30.62 இலட்சம் மதிப்பில் 14 பயனாளிகளுக்கு சிற்றுந்து வாகனம், சரக்கு வாகனம், சக்கர பயணியர் வாகனம், தொழில் கடனுதவிகளும், ரூ.4.50 இலட்சம் மதிப்பில் 9 பயனாளிகளுக்கு கறவை மாடு கடனுதவிகளும், ரூ.25 இலட்சம் செலவில் 50 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் உதவித் தொகைகளும்,50 பயனாளிகளுக்கு தூய்மை பணியாளர் உறுப்பினர் அடையாள அட்டைகளும்,தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் ரூ.10 இலட்சம் மதிப்பில் வாகைகுளம் ஊராட்சி சுய உதவிக்குழு கடனுதவிகளும், வேளாண்மைத்துறை சார்பில் ரூ.1,848 மதிப்பில் 3 பயனாளிகளுக்கு மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நலத்திட்டங்களும், ரூ.2,560 மதிப்பில் ஒரு பயனாளி களுக்கு உணவு மற்றும்ஊட்டச்சத்து இயக்கம் கீழ் நலத்திட்டங்களும், ரூ.300 மதிப்பில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கும்,மாவட்ட சமூக நலத்துறை சார்பில் ரூ.1.50 இலட்சம் மதிப்பில் 5 பனாளிகளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைப்புத் தொகைக்கான ஆணைகளையும் என மொதத்தம் ரூ.12.68 கோடி மதிப்பில் 6,754 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினர்.



கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்ட நிலையில் வேளச்சேரி மேற்கு பகுதியில் 177வது வார்டில் அமைந்துள்ள மாநகராட்சி பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா கழக தேர்தல் பணிக்குழு செயலாளரும் வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பி.மணிமாறன் ஆகியோர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு புதிய சீருடை மற்றும் நோட்டு புத்தகங்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் சு.சேகர், வட்ட செயலாளர் என்.தாமோதரன், மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தமிழனத்தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சிவந்தி ஆதித்தன் நகரில் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் அவர்கள் தலைமையில் துப்புரவு பணியாளர்களுக்கு நலதிட்ட உதவிகளும் பொதுமக்களுக்கு இனிப்புகளையும் வழங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் அவர்கள் முன்னிலை வகித்தார்.. இதில் காசிம்முகமது, பொன்கோதண்டன், நா.பரசுராமன், எம்.ஜி.கார்த்திக், எம்.ஜெகன், ஆர்.சி.சிவசங்கரன் ஜீவா, கார்த்திக் ராஜா, நித்தியானந்தம், ஹரிஷ், விக்கி, ஹரி, ஜெகன், லோகேஷ், கவின், சூர்யா, சத்யா, தமிம்அன்சாரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.